# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்

## 05.03.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

நாம் ஏற்கனவே அறிந்திருப்பது போன்று இறை ஜமாஅத்துகளில் இருப்பவர்களுக்கு மக்களை இறைவனை நோக்கி அழைத்தல், மக்களின் நெறியிழந்த எண்ணங்கள், சிந்தனைகளை சரியாக்கும் பொறுப்பு உள்ளது. இதுவே அந்த ஜமாஅத்தை உருவாக்கிய நபிமார்களின் பொறுப்பும் ஆகும். அந்த போதனைகள் ஒரு காலகட்டத்திற்குப் பிறகு மேன்மேலும் தடம்புரண்டு கொண்டே செல்கின்றன. அவற்றை அடையாளம் கண்டு மக்களுக்கு சத்தியத்தின் பாதையைக் காட்ட வேண்டும். எப்போதும் நபிமார்களின் ஜமாஅத் ஆரம்பத்தில் மிகவும் குறைந்த எண்ணிகையைக் கொண்டதாகவே இருந்தது என்று மார்க்க வரலாறுகள் கூறுகின்றன. நபிமார்கள் செய்யும் பணிகளுக்கு கடும் எதிர்ப்புகளும் ஏற்பட்டன. காலத்தின் ஃபிர்அவ்ன், ஹாமான் மற்றும் அவனது கூட்டத்தினர் முழுமூச்சுடன் கூச்சலிடுகின்றனர். நபிமார்கள் மற்றும் அவர்களின் ஜமாஅத்தை வேரறுக்க நினைக்கின்றனர். மார்க்கங்களுடன் தொடர்ந்து இவ்வாறுதான் நடந்து கொள்ளப்படுகிறது. இதுவே அல்லாஹ்வின் நடைமுறையாக இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் இஸ்லாத்தின் எதிரிகள் இவ்வாறுதான் நடக்க வேண்டியிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர்களும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் ஆவார்கள். துன்பங்கள், சோதனைகள், யுத்தங்கள் போன்றவற்றை அவர்களும் கடந்து செல்ல வேண்டியதிருந்தது. முந்தைய நபிமார்களின் காலத்தில் இதற்கு எந்த உதாரணமும் காணப்படவில்லை. அந்த அளவிற்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் உயர் தரமான உறுதி நிறைந்தவர்களாக இருந்தனர். இவை அனைத்தையும் வெற்றிகரமாக கடந்து சென்றனர். இதுபோன்ற பாறை போன்ற உறுதியாக இருந்த ஈமான்தான் இன்னுயிரையும் கொடுப்பதற்கு தயராக இருந்த அவர்களது சஹாபாக்களிடமும் உருவாக்கினார்கள். துன்பங்கள், காயங்கள், குறைவான எண்ணிக்கையுள்ள மக்கள், ஆயுதங்களின் பற்றாக்குறை போன்ற எதுவும் சஹாபாக்களின் உறுதித்தன்மையை குலைக்க முடியவில்லை.

திருக்குர்ஆனில் இந்த ஈமான் கொண்டவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறான். அதிகாரம் ஆலி இம்ரானில் அல்லாஹ் கூறுகின்றான்:

**அல்லஸீனஸ் தஜாபூ லில்லாஹி வர்ரஸுலி மிம் பஃதி மாஅஸாபஹுமுல் (q)கர்ஹ். லில்லஸீன அஹ்ஸனூ மின்ஹும் வத்த(q)கவ் அஜ்ருன் அழீம்** – தங்களுக்குக் காயம் ஏற்பட்டதன் பிறகு(ம்) அல்லாஹ்வினுடையதும், தூதருடையதுமான கட்டளையினை ஏற்றுக் கொண்டவர்களுள், தங்கள் கடமையினை நன்முறையில் நிறைவேற்றியவர்க்கும் இறையச்சத்தை மேற்கொண்டவர்களுக்கும் பெரும் கூலி உண்டு. **(3:173)**

**அல்லஸீன (q)கால லஹுமுன்னாஸு இன்னன்னாஸ (q)கத்ஜமவூல(k)கும் ஃப(kh)ஹ்ஷவ்ஹும் ஈமானவ் வ(q)காலூ ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல்** – எதிரிகள் அவர்களிடம் வந்து; உங்களுக்கு எதிராக மக்கள் (படையைத்) திரட்டியுள்ளனர். எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சுங்கள் என்று கூறினர். ஆனால் இது, அவர்களின் நம்பிகையை மேலும் வளரச் செய்தது. மேலும், இறைவனே எங்களுக்குப் போதுமானவன். அவன் எவ்வளவோ நல்ல பாதுகாவலன் என்றும் அவர்கள் கூறினர். **(3:174)**

இவ்வாறு இறைவனுக்காக உயிரைத் தியாகம் செய்யும் காட்சியை உஹதுப் போரில் நாம் கண்டோம். முஸ்லிம்களின் ஒரு குழுவினர் செய்த தவறின் காரணத்தால் வெற்றியை நோக்கி சென்று கொண்டிருந்த யுத்தம் முஸ்லிம்களுக்கு தோல்வியைக் காட்டத் தொடங்கியது. குஃப்பார்கள் திரும்பி வந்து தாக்குதல்

தொடுக்கத் தொடங்கினர். முஸ்லிம்களுக்கு பெரும் உயிர் சேதம் ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட காயமுற்றார்கள். அவர்களின் பல்லும் ஷஹீதானது. ஆனால் சஹாபாக்கள் உறுதியான சுவரைப் போன்று அவர்களுக்கு முன்னால் ஒன்று திரண்டனர். எந்த சக்தியும் சஹாபாக்களை அசைக்க முடியவில்லை. தமது உயிரைப் பொருட்படுத்தாமல் சஹாபாக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களை செயலிழக்கச் செய்தனர். மார்க்க வரலாற்றில் மிகவும் ஆச்சரியமான ஒரு காட்சியாகும். மக்கத்துக் காஃபிர்கள் வெளிப்படையாக பாக்கும் போது வெற்றியைப் பெற்றது போன்ற தோற்றம் ஏற்பட்டது. ஆனால் யுத்தத்திற்குரிய கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது எதிரிகள் அடைந்தது பெரும் தோல்வியேயாகும். குஃப்பார்களின் படை யுத்தத்திலிருந்து திரும்பிய போது சில அரபுக் கோத்திரங்கள் அவர்களை சீண்டினர். நீங்கள் பெரும் வெற்றி பெற்றுள்ளதாகவும், பத்ர் போருக்கு இப்போது பழிவாங்கி விட்டதாகவும் ஆர்ப்பரித்துக் கொண்டு வருகிறீர்கள். இது என்ன பெரிய வெற்றி? எதிர் தரப்பினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போர் பொருட்கள் எதுவும் உங்களிடம் காண முடியவில்லை. எதிர் தரப்பிலிருந்து எவரையும் கைது செய்யவுமில்லை? நாங்கள் முஸ்லிம்களை பழிவாங்கி விட்டோம் என்று வாதம் செய்கிறீர்கள்! இவ்வாறு அரபுக் கோத்திரங்கள் சீண்டியதை வைத்து ஊருக்கு திரும்பும் வழியிலேயே மக்கத்துக் குஃப்பார்கள் யோசிக்கத் தொடங்கி விட்டனர். அப்படியே திரும்பிச் சென்று காயம் பட்ட முஸ்லிம்களிடம் மீண்டும் போர் தொடுத்து வெற்றியை முழுமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொள்ளத் தொடங்கினர். இந்த யோசனையிலும் கூட இரண்டு பிரிவு உருவானது. ஒரு பிரிவு, கிடைத்த வெற்றியே போதுமானது. ஏனெனில் இனிமேல் திருப்பித் தாக்குதல் தொடுத்தால் இதுவரை உஹதுப் போரில் கலந்து கொள்ளாத சஹாபிகளும் கலந்து கொள்வர். மதீனாவின் மீது நாம் தாக்குதல் தொடுப்பதால் ஊரிலுள்ள அனைவரும் உயிரைக் கொடுத்து நம்மோடு சண்டையிடத் தொடங்கி விடுவர் என்று கூறியது.

எதிரிகளின் இரண்டாவது தாக்குதல் குறித்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் செய்தி எட்டியது. மறுநாள் எல்லாரையும் ஒன்றுகூட்டினார்கள். குஃப்பார்களை விரட்ட படையைத் தயார் செய்ய உத்தரவிட்டார்கள். அப்படையில் உஹதில் கலந்து கொண்ட அதே சஹாபாக்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும் என்றும் நிபந்தனையிட்டார்கள். இப்போது சஹாபாக்களின் நிலையை யோசித்துப் பாருங்கள். முன்தினம் யுத்தம் செய்து களைத்துப் போயிருந்தனர். அதிகமானோர் காயமுற்றும் இருந்தனர். இருந்தும் 250 முஸ்லிம்களைக் கொண்ட படை வடிவமைக்கப்பட்டு மதீனாவிலிருந்து புறப்பட்டது. அனைவரும் மிகவும் உற்சாகத்துடன் புறப்பட்டனர். மதீனாவிலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள அம்ராவுல் அஸத் என்ற மைதானத்தில் தங்கினார்கள். சஹாபாக்களிடம், 500 இடங்களில் தீ மூட்டுமாறு கட்டளையிட்டார்கள். தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு அது பெரும் திகிலை ஏற்படுத்தியது. இந்த தகவல் குஃப்பார்களை எட்டியதும் அப்படியே திரும்பிப் போவதே சிறந்தது என்று கருதினர். குஃப்பார்கள் திரும்பி சென்று விட்டார்கள் என்ற செய்தி உறுதிப்படுத்தப்பட்டு அங்கேயே இரு நாட்கள் தங்கிவிட்டு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் மதீனா திரும்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வே குஃப்பார்களின் உள்ளத்தில் இந்த திகிலை உண்டுபண்ணினான். அல்லாஹ் சஹாபாக்களின் இந்த தியாகத்தை பாராட்டினான். யுத்தத்தில் பட்ட அந்த காயத்திற்காக பெரும் கூலியை வழங்குவதாக நற்செய்தியும் கூறினான்.

இன்னொரு முக்கிய விஷயம் என்னவெனில், உஹதிலிருந்து திரும்பும் போது அபூசுப்யான் ஓர் அறைகூவல் விடுத்திருந்தார். வரும் வருடம் பத்ர் மைதானத்தில் மீண்டும் நமது யுத்தம் தொடரும் என்று கூறிவிட்டு சென்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டார்கள். சரி வாருங்கள் என்று கூறினார்கள். அதுபோன்று ஹிஜ்ரி 4 ஆம் வருடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1500 பேர் கொண்ட ஒரு படையை தயார் செய்தார்கள். அபூசுப்யானும் மக்காவில் 2000 பேர் கொண்ட ஒரு படையை தயார் செய்தார். ஆனால் உள்ளத்தில் அபூசுப்யானுக்கு ஒரு பயமும் இருந்தது. முஸ்லிம்களை எதிர்கொள்வதற்கு நமது படையின் எண்ணிக்கை குறைவுதான் என்ற எண்ணம் இருந்தது. முஸ்லிம்கள் எவ்வளவு பேர் தயார் ஆவார்கள் என்று உளவு பார்த்தார். உடனே அபூசுப்யான் ஒரு தந்திரம்

செய்தார். ஒருவரை மதீனாவுக்கு அனுப்பினார். மக்காவாசிகள் பெரும் படையைத் தயார் செய்கின்றனர். அப்படையை உங்களால் சந்திக்க முடியாது என்று கூறி அம்மனிதர் முஸ்லிம்களை பயமுறுத்துவதற்காக அனுப்பி இருந்தார். ஆனால், எதிரிகளின் இந்த பிரச்சாரம் முஸ்லிம்களிடம் நம்பிக்கையை அதிகரிக்கவே செய்கிறது என்று அல்லாஹ் கூறுகின்றான்.

**வ(q)காலூ ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல்** – மேலும், இறைவனே எங்களுக்குப் போதுமானவன். அவன் எவ்வளவோ நல்ல பாதுகாவலன் என்றும் அவர்கள் கூறினர். (3:174)

இவ்வாறு 1500 பேர் கொண்ட முஸ்லிம்களின் படை பத்ர் மைதானத்தை அடைந்தது. ஆனால் குஃப்பார்களின் படை மக்காவை விட்டு சிறிது தூரம் சென்ற பிறகு மக்காவுக்கு திரும்பிச் சென்று விட்டது. இது பஞ்சத்தின் காலம். நாம் இப்போது யுத்தத்திற்கு தயாராக இயலாது. அடுத்த வருடம் முழு ஆயத்தங்களுடன் யுத்தத்திற்கு செல்வோம் என்று சாக்குப்போக்குகளை கூறியவாறு ஊருக்கு திரும்பினர். எனவே குஃப்பார்கள் ஒருவரை அனுப்பி மக்கத்தினரிடம் ஒரு பெரும் படை தயாராகிக் கொண்டிருக்கிறது என்று முஸ்லிம்களை பயமுறுத்துவதற்காக செய்த முயற்சியும் பலனளிக்கவில்லை. அல்லாஹ்வும் முஃமின்களின் நிலையைக் குறித்து திருக்குர்ஆனில் சாட்சி கூறியுள்ளான். மரண பயம் குஃப்பார்களிடம் ஏற்படுமே தவிர முஃமின்களைப் பொருத்தவரை அவர்களுக்கு அவர்களின் ஈமானை அதிகரிக்கவே செய்யும். முஸ்லிம்கள் பத்ர் மைதானததில் சென்று சில நாட்கள் தங்கினர். குஃப்பார்களின் படை பயம் கொள்ளத் தொடங்கினர். அவர்கள்தான் முதலில் முஸ்லிம்களை பயமுறுத்துவதற்காக ஒருவரை மதீனாவுக்கு அனுப்பினர். இப்போது அவர்களே பயம் கொள்ளத் தொடங்கினர். இவ்வாறு இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு திகில் குஃப்பார்களிடம் உருவானது.

**ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல்** – இறைவனே எங்களுக்குப் போதுமானவன். அவன் எவ்வளவோ நல்ல பாதுகாவலன் (3:174) என்ற முழக்கம் உள்ளத்தில் இருந்து எழுந்ததாகும். இது ஒரே ஒரு சம்பவம் அல்ல. சஹாபாக்களின் வாழ்வில் இவை நிரம்பி காணப்படுகின்றன. எதிரிகள் ஒன்றிணையவும், முஸ்லிம்களை பயமுறுத்தவும் செய்த எந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை. இதுவே இன்று உண்மையான முஃமின்களின் அறிவிப்பாகவும் இருக்க வேண்டும்.

இதே போன்றே இன்று முஹம்மதிய மஸீஹின் ஜமாஅத்தை பயமுறுத்தவும் முயற்சி செய்யப்படுகிறது. ஆனால் முஃமின்கள் எந்த ஒரு பிரிவின், அமைப்பின், அசெம்பிளியின் பயமுறுத்தலுக்கும் பயப்படுவதில்லை என்று இறைவன் கூறுகிறான். எப்போதும் பொறுமையைக் கைக்கொண்டவாறு தமது ஈமானில் உறுதியை ஏற்படுத்திக் கொண்டு செல்கின்றனர். அடிவாங்கினாலும் பொறுமையை மேற்கொள்கின்றனர். பெரும் நஷ்டம் அடைகின்றனர். ஆனால் ஈமானில் பலவீனம் ஏற்பட விடுவதில்லை. ஷஹீதாக்கப்படுகின்றனர். ஷஹீதானதால் ஏற்பட்ட விதவை, தகப்பனை இழந்த குழந்தைகள், உறவினர்கள் பயந்து போய் மார்க்கத்தை விட்டுவிடுவர் என்று எதிரிகள் எண்ணுகின்றனர். ஆனால் முஃமின்களிடம் இவர்களின் செயல்கள் எந்த திகிலையும் ஏற்படுத்தியதில்லை. மாறாக அவர்களின் பதில் எப்போதும் **ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல்** – இறைவனே எங்களுக்குப் போதுமானவன். அவன் எவ்வளவோ நல்ல பாதுகாவலன் (3:174) என்பதாகவே இருந்தது. எப்போதும் அவர்களின் பார்வை இறைவன் மீதுதான் இருந்தது. எதிரிகள் கூச்சலை அதிகமாக்க அதிகமாக்க முஃமின்கள் இறைநேசத்தில் இன்னும் அதிகமாக மூழ்கவே முயற்சி செய்கின்றனர்.

இன்று சில நாடுகளில் அஹ்மதிய்யத்திற்கு எதிர்ப்புகள் எழுந்துள்ளன. இது அஹ்மதிய்யத்தின் உண்மைக்கு ஆதாரமாகும். இது நம்மை முன்பை விட அதிகமாக துஆவின் பக்கம் கவனமூட்டுவதாக இருக்கின்றது. இந்த எதிர்ப்பு அனைத்தும் – 72 பிரிவுகளின் எதிர்ப்பும் ஒன்றுசேர்ந்தும் கூட பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எந்த நஷ்டத்தையும் ஏற்படுத்தவில்லை. ஏற்படுத்தவும் முடியாது. முஃமின்களின் பார்வையில் வெளிப்படையான நஷ்டம் எந்த முக்கியத்துவத்தையும் பெறுவதில்லை. உண்மையான செல்வம் ஈமான் என்ற செல்வமேயாகும். அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு ஷஹீதும் உயிர் தியாகம் செய்த பிறகு அவர்களின் குழந்தைகள் மற்றும் குடும்பத்தாரிடமிருந்து முன்னரை விட அதிகமாக உறுதியான ஈமானைக் காட்டும் கடிதங்களைப் பெறுகிறேன். இதே நிலைதான் இன்று இந்தியாவின் சில பகுதிகளில் காணப்படுகின்ற எதிர்ப்புகளின் நிலையும் ஆகும். எல்லா மவ்லவிகளும் ஒன்று சேர்ந்து புதிதாக பைஅத் செய்தவர்களுக்கு

கஷ்டம் கொடுக்க முயற்சி செய்கின்றனர். மார்க்கத்திலிருந்து தம் வழிக்கு இழுக்க முயற்சி செய்கின்றனர். இதே நிலைதான் பங்களாதேஷிலும் இன்னும் பல இடங்களிலும் காணப்படுகிறது. இவர் அஹ்மதி என்று தெரிந்ததும் அரசு வட்டாரங்கள் அவரை பயமுறுத்த நினைக்கின்றன. ஷாம், மிஸ்ர் அல்லது வேறு எந்த நாடாக இருப்பினும் இதுவே நிலை. இதே நிலைதான் பல்கேரியாவில் அஹ்மதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அவர்கள் அஹ்மதிய்யத்தை விட வேண்டும் என்று கூறுகின்றனர். அரசு முஃப்தி காவல்துறையினர் மிரட்டுகின்றார். இவ்வாறே ரஷ்யாவின் சில முஸ்லிம் பகுதிகளில் அரசு அதிகாரிகளின் துணையுடன் அஹ்மதிகளை அடக்க முயற்சி செய்கின்றனர். சுருக்கமாக உலகின் பல்வேறு பகுதிகளில் முஹம்மதிய மஸீஹின் ஜமாஅத்தின் மீது எதிர்ப்பு உலகளாவிய முறையில் நடைபெறுகிறது. ஆனால் அல்லாஹ்வின் ஹஸீப் என்ற பண்பை உணர்ந்தவர்கள் எல்லா இடத்திலும் கீழ்க்கண்ட பதிலையே தருகின்றனர்.

எவ்வளவு திட்டம் வேண்டும் என்றாலும் தீட்டுங்கள். **ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல் – இறைவனே எங்களுக்குப் போதுமானவன். அவன் எவ்வளவோ நல்ல பாதுகாவலன் (3:174)** என்பதுதான் எமது பதிலாகும்.

ஏனெனில் நாங்கள் எங்களது எஜமானரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்து அதனையே கற்றுள்ளோம். அஹ்மதிகள் சகிப்புத் தன்மையுடன், அச்சம் எதுவும் இன்றியும் இந்த கஷ்டங்களை பொறுத்துக் கொணடு செல்ல வேண்டும். நமது ஈமானில் உறுதியை உருவாக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:**

உண்மையான வீரத்தின் ஆணிவேர் பொறுமையும் உறுதியான பாதமும் ஆகும் என்று இந்த வசனத்தின் மூலம் புரிய வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆவேசமும் சோதனைகளும் எதிரிகளைப் போன்று நம்மை தாக்கும் போது அதற்கு எதிரில் உறுதியான பாதத்துடன் நிற்பது, கோழைத்தனமாக ஓடாமல் இருப்பதுதான் வீரம் ஆகும்.

இங்கு இன்னொரு கருத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திறந்து தந்துள்ளார்கள். வெளிப்படையான எதிரிகள் தவிர வேறு எதிரிகளும் இருக்கின்றனர். மன எழுச்சிதான் அந்த ஒரு எதிரியாகும். அதுவும் ஒரு சோதனையாகும். இது எதிரியைப் போன்று நம்மை தாக்குகிறது. அதற்கு எதிராகவும் கூட உறுதியான பாதத்துடன் நிற்க வேண்டும். அதுவே முஃமின்களுக்குரிய அடையாளமாகும்.

உள்ளக் கிளர்ச்சியை அடக்க ஆற்றல் பெற்றால்தான் வெளிப்படையான எதிர்ப்புகளை சமாளிக்க நீங்கள் ஆற்றல் பெறுவீர்கள். ஈமானில் வளர்ச்சியும் அப்போதுதான் ஏற்படும். நமது உட்காருதல், எழுதல் எல்லாமே அல்லாஹ்வுக்காகவே என்ற எண்ணம் உள்ளத்தில் வர வேண்டும். காலத்தின் உலகாதாயங்களில் மூழ்கிவிட்டால் இக்கால மக்கள் செல்கின்ற அதே வழியில் நீங்களும் போய் விட்டால் எதிரிகளின் சதிகள், உயிர், பொருள் நஷ்டத்தின் சகிப்புத்தன்மை இல்லாமற் போய் விடும். எனவே மன எழுச்சிகளையும் வென்று உறுதியான பாதத்தை நிலைநாட்டுவது முஃமினுக்கு மிக மிக முக்கியமாகும். இதுவே வெளிப்படையான எதிரிகளுக்கு எதிராகவும் நமக்கு ஆற்றலை வழங்கும். பிறகு **ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல் – இறைவனே எங்களுக்குப் போதுமானவன். அவன் எவ்வளவோ நல்ல பாதுகாவலன் (3:174)** என்ற இந்த முழக்கம் உள்ளத்திலிருந்து எழும். அது அல்லாஹ்வின் அர்ஷை சென்றடையும். பிறகு அல்லாஹ்வே ஹஸீப் – போதுமானவன் என்ற காட்சி தென்படும். மனிதனால் அது சிந்தித்துக்கூட பார்க்க இயலாததாக இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த ஜமாஅத்தில் நீங்கள் நுழைகிறீர்கள் என்றால் இந்த போதனையை செயல்படுத்துங்கள். கஷ்டங்கள் உங்களுக்கு வராமல் பலன் எவ்வாறு கிடைக்குமா?

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவில் 13 வருடங்கள் கஷ்டப்பட்டார்கள். உங்களுக்கு இந்த கஷ்டங்களைப் பற்றி தெரியவும் செய்யாது. அதுபோன்ற கஷ்டங்கள் உங்களை வந்தடைந்ததும் இல்லை. சஹாபாக்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்நிலையிலும் கூட பொறுமையின் போதனையை செய்தார்கள். கடைசியில் எல்லா எதிரிகளும் அழிந்து விட்டார்கள். ஒரு காலம் விரைவில் வரவிருக்கிறது. அப்போது எந்த விஷமிகளும் கூட உங்களுக்கு தென்படப் போவதில்லை. அல்லாஹ் இந்த ஜமாஅத்தை உலகில் பரப்ப நாடுகிறான். இவர்களோ உங்களை சிறு கூட்டம் என்று துச்சமாகக் கருதி துக்கம் தருகின்றனர். இந்த ஜமாஅத் பெரும்பான்மை ஆகும் போது இவர்கள் தாமாகவே அமைதியாகி விடுவார்கள். இறைவன் நாடியிருந்தால் இவர்கள் உங்களுக்கு கஷ்டம் கொடுத்திருக்கமாட்டார்கள். கஷ்டம் கொடுப்பவர்கள் பிறந்திருக்கவேமாட்டார்கள். ஆனால் இறைவன் இவர்கள் மூலமாகவே முஃமின்களாகிய உங்களுக்கு பொறுமையைப் போதிக்க விரும்புகின்றான். சிறிதுகால அவகாசத்திற்குப் பிறகு எதுவுமே இல்லை என்பதை பார்ப்பீர்கள். எவர்கள் கஷ்டம் தருகிறார்களோ அம்மக்கள் ஒன்று தவ்பா – கழிவிரக்கம் செய்வார்கள். அல்லது அழிந்து போய் விடுவார்கள். (அஹ்மதிகளை) திட்டுவதை நன்மை என்று நாங்கள் நினைத்தோம். இப்போது தவ்பா செய்கிறோம். பைஅத் செய்கிறோம் என்று பல கடிதங்கள் வருகின்றன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பொறுமையும் ஒரு இபாதத் ஆகும். பொறுமையாளர்களுக்கு பிரதிபலன் கிடைக்கும் போது அதற்கு அளவே இருக்காது. கணக்கில்லாத வெகுமதிகளை இறைவன் கொடுத்து விடுகிறான். இது பொறுமையாளர்களுக்கு மட்டுமே தரப்பட்ட வாக்குறுதியாகும். மற்றவர்களுக்காக அல்ல.

ஒரு மனிதர் ஒருவரது உதவியால் வாழ்வைக் கழித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் வந்து கொண்டேயிருக்கிறது. கடைசியில் உதவி செய்பவருக்கே ரோஷம் வந்து விடுகிறது. பிறகு தன்னிடம் உதவி பெறுபவருக்கு கஷ்டம் கொடுப்பவரை அழித்து விடுகிறார். அதேபோன்று ஜமாஅத் இறை உதவியைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. கஷ்டப்படுவதால் ஈமான் வலுப்பெறுகிறது. பொறுமையைப் போன்று பெரிய விஷயம் எதுவுமில்லை.

இன்று நான் ஹஸீப் சம்பந்தமாக சில விஷயங்களை கூறினேன். அவற்றுள் சில இதனை ஒத்தவையாகும்.

உறுதியான பாதத்தையுடைய பொறுமையாளர்களாகிய முஃமின்களுக்கு எதிரிகளின் எதிர்ப்பும் இறை நெருக்கத்தை பெறுவதற்கு காரணமாகவே அமைகின்றன என்பதை நாம் பார்த்தோம். அவை முஃமின்களுக்கு **ஹஸ்புனல்லாஹு வநிஃமல் வகீல் – இறைவனே எங்களுக்குப் போதுமானவன். அவன் எவ்வளவோ நல்ல பாதுகாவலன் (3:174)** என்ற உணர்வை ஏற்படுத்துகின்றன.

நான் கூற வந்த இரண்டாவது வசனத்தில் நபிமார்களின் வருகை மற்றும் அவர்களின் ஜமாஅத்தின் நோக்கம் என்ன? என்பதை கூறுகிறது.

நபியின் மீது இறங்கிய கட்டளைகளை தெளிவாக உலகிற்கு எடுத்து வைத்து விடுங்கள். இதுவே உங்கள் பணியாகும். அவற்றை ஏற்றுக் கொண்டார்களா? இல்லையா? என்பதைப் பற்றி கணக்குகளை அல்லாஹ்வே எடுப்பான். அது அவனது வேலையாகும். இறைவன் கணக்கெடுப்பதில் தீவிரமானவன் ஆவான். இந்த கருத்தும் சூரா அர்ரஅத்தின் 41வது வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

**வஇம்மா நுரியன்ன(k)க பஃலல்லஸீ னஇ(d)துஹும் அவ்ன(th)தவஃப்ப யன்ன(k)க ஃபஇன்னமா அலை(k)கல் பலா(g)கு அலைனல் ஹிஸா(b)ப்** – நாம் அவர்களுக்கு அளித்த **தண்டனைக்குரிய வாக்குறுதியின் ஒரு பகுதியினை (உம் வாழ்நாளில் நினைவுபடுத்தி) உமக்குக் காட்டினாலோ, நாம் உமக்கு (அந்த நேரத்திற்கு முன்னரே) மரணத்தை தந்துவிட்டாலோ (இரண்டும் ஒன்றே. ஏனெனில்) தூதுச் செய்தியை தெரிவிப்பது மட்டுமே உம்மீது (பொறுப்பாக) உள்ளது. (அவர்களிடம்) கேள்வி, கணக்குக் கேட்பது எம்முடைய பொறுப்பாகும். (13:41)**

**அவலம் யரவ் அன்னா னஃ(th)தில்அர்ழ னன்(q)குஸுஹா மின்அ(th)த்ராஃபிஹா. வல்லாஹு யஹ்(k)குமு லா முஅக்கிப லிஹுக்மிஹீ வஹுவ ஸரீஉல் ஹிஸா(b)ப்** - நாம் **(அவர்களின்) நிலத்தை அதன் எல்லைகளிலிருந்தும் சுருக்கிக் கொண்டே வருவதை அவர்கள் கண்டதில்லையா? மேலும் அல்லாஹ்வே தீர்ப்பு வழங்குகின்றான். அவனது தீர்ப்பை மாற்றுபவர் எவருமில்லை. மேலும், அவன் விரைவில் கணக்கெடுப்பவனாவான். (13:42)**

முதலாவது வசனமாகிய அர்ரஅத்தின் 41வது வசனத்தில் முந்தைய வசனத்தின் கருத்து தொடர்ந்து வருகிறது. எதிரிகளுக்கு தண்டனை கொடுப்பதில் இறைவனுக்கு என்று ஒரு வழிமுறை உள்ளது. அவன் மாலிக் – எஜமான் ஆவான். எப்போது எதிரிகளுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று நன்றாக அறிந்துள்ளான். அவன் ஆலிமுல் கைப் (மறைவானவை அவனது அறிவில் உள்ளது) ஆவான். யாருக்கு தண்டனை கொடுக்க வேண்டும்? எதற்காக கொடுக்க வேண்டும்? என்று அறிகிறான். மேலும் தண்டனை பற்றிய பொதுவான ஒன்றை கூறிய பிறகு, தண்டனையை உடனே கொடுக்க வேண்டும் என்பதும் கண்டிப்பல்ல. தண்டனை என்பது ஓர் அடையாளமாகும். அதன் நோக்கமே சீர்திருத்துவதுதான். யார் எப்படிப்பட்டவர்? நபிமார்களை எதிர்ப்பதை விட்டு எவர் திரும்புவார்? சீர்திருத்தம் பெறுவார்? தண்டனையிலிருந்து தப்பிப்பவர் யார்? என்பதும், யார் தண்டனையிலிருந்து சிறிது பாகத்தைப் பெற்ற பிறகு திருந்துவார்? அல்லது யார் எதிர்ப்பிலேயே முன்னேறுவார்? விஷமத்தில் வளர்ச்சி பெறுவார்? என்று இறைவனுக்கு நன்கு தெரியும். அவர்கள் மீது தண்டனை இறங்குகிறது.

எனவே அல்லாஹ் கூறுகிறான். நபியே உம் மூலமாக சில எச்சரிக்கை ரீதியிலான வாக்குறுதிகள் தரப்படுகின்றன. அவை சிலர் விஷயத்தில் உடனே காட்டி விடுவோம். சிலர் விஷயத்தில் நபியே உமது மரணத்திற்குப் பிறகும் கூட அவ்வாக்குறுதிகள் நிறைவேறலாம். பத்ர் மைதானத்தைப் பாருங்கள். சில இடங்களை அடையாளமிட்டும் காட்டினார்கள். இங்கு அபூஜஹ்லின் உடலும், இங்கு உத்பா, ஷீபாவின் உடலும் கிடக்கும் என்றார்கள். ஆக இவர்கள் ஈமான் கொள்ளமாட்டார்கள் என்பதும் இறைவனின் அறிவில் இருந்தது. எனவே அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப கொலை செய்யப்பட்டனர். அவர்களின் மரணம் தள்ளிப்போகவில்லை. இன்னும் சிலர் பிற்காலத்தில் ஈமான் கொள்ள வேண்டியிருந்தது. அதுவும் அல்லாஹ்வின் அறிவில் இருந்தது. உதாரணமாக அபூசுப்யான், இக்ரிமா போன்றவர்கள். இவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான போர்களில் கலந்து கொண்டிருந்தவர்கள். அப்படியெல்லாம் இருந்தும் அவர்கள் விட்டு வைக்கப்பட்டனர். இறுதியில் முஸ்லிம்கள் ஆயினர். இஸ்லாத்திற்காக யுத்தம் செய்தனர்.

ஆக நபி மற்றும் அவரது ஜமாஅத்தின் தப்லீக் தான் அசல் வேலையாகும். தண்டனை கொடுப்பது நோக்கமல்ல. அசல் நோக்கம் மக்களை ஓர் இறைவனை வணங்குபவர்களாக ஆக்குவதாகும். எனவே வரம்பு மீறியவர்களின் மீது எச்சரிக்கை ரீதியிலான முன்னறிவிப்பு நிறைவேறும். சிலர் விட்டு வைக்கப்படுவார்கள். அசல் விஷயம் எச்சரிக்கை செய்யப்பட்ட விஷயங்களை தொடர்ந்து செய்பவர்கள் பிடிக்கப்படுவர். நபியின் காலத்திலும் சரி அல்லது அவர்களின் காலத்திற்குப் பிறகும் சரி தண்டனை பெறலாம். அவர்கள் சீர்திருந்தவில்லை எனில் பிடிக்கப்படுவர். எப்படி பிடிக்கப்படுவர்? அல்லது எப்போது? இங்கேயா? மறுஉலகிலா? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். மேலும் எது பயனளிக்கக் கூடியது? உடனே பிடிப்பது நல்லதா? அல்லது சிறிது விட்டு வைப்பது நல்லதா என்றும் இறைவனே நன்கறிவான். எனவே இறைவன் கூறுகிறான். கணக்கெடுப்பது நமது பொறுப்பாகும். ஆட்சேபனை செய்பவர்கள் இந்த முன்னறிவிப்பு நிறைறேவில்லை; அந்த முன்னறிவிப்பு நிறைவேறவில்லை என்று ஆட்சேபனை செய்கின்றனர்.

ஆனால் அல்லாஹ்வின் முன் நிறுத்தப்படும் போது எல்லாம் தெளிவாக்கப்பட்டு விடும். இறைவன் கணக்கெடுப்பவனாவான். இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எதிரிகளும் கூட இதே ஆட்சேபனைதான் செய்கின்றனர். எனவே இவர்களுக்கும் இதே பதில்தான். ஏனெனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெளிவாக எழுதியுள்ளார்கள். சில விஷயங்கள் நபியின் காலத்திற்குப் பிறகு நிறைவேறுகின்றன. அவற்றை இறைவன் நபிமார்களின் ஜமாஅத்தின் மூலம் நிறைவேற்ற விரும்புகிறான்.

பல முன்னறிவிப்புகள் நிறைவேறியதற்கு அஹ்மதிகள் சான்று பகர்ந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மையை வெளிப்படுத்தியவாறு உதிக்கின்றது.

அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்: எதிரிகள் ஆட்சேபனை செய்கின்றனர். இது நிறைவேறவில்லை. அது நிறைவேறவில்லை என்கின்றனர். நாம் பூமியை எவ்வாறு அதன் விளிம்புகளில் இருந்து சுருக்கிக் கொண்டு வருகிறான் என்று எதிரிகளுக்கு தெரியாது என்று அல்லாஹ் கூறுகிறான்.

எவ்வாறு இஸ்லாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் பரவிக் கொண்டிருந்தது என்பதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு நாளும் சான்றாகும். எதிரிகளின் காலுக்கு அடியிலிருந்து பூமி நழுவிக் கொண்டிருந்தது. பல்வேறு நகரங்களில் வசித்த செல்வந்தர்கள் ஏழைகள் அனைவரும் இஸ்லாத்தில் இணைந்து தம்மை பாதுகாப்பு அரணுக்குள் கொண்டு வந்தனர். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே மக்காவின் வெற்றி ஏற்பட்டது. அரபு நாட்டிற்கு வெளியிலும் இஸ்லாம் பரவியது. பிறகு கிலாஃபத்தே ரா**ஷி**தாவின் காலத்திலும் அதற்குப் பிறகும் கூட இஸ்லாம் பரவிக் கொண்டேதான் சென்றது. எனவே யாருக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று இறைவனே முடிவு செய்கிறான். கடந்த காலத்திலும் அவனே செய்து வந்தான். இப்போதும் அவனே முடிவு செய்கிறான். இனியும் செய்வான். அல்லாஹ்வின் கட்டளையை முறிப்பவன் எவனும் இல்லை. அல்லாஹ் தனது ரஸூலுடன் இருக்கிறான். அவரது வளர்ச்சியை எவனும் தடுக்க முடியாது. **அவனது கட்டளையை தடுப்பவன் எவனும் இல்லை** (13:42) என்று கூறி முஃமின்களுக்கு தைரியமூட்டியுள்ளான். எனவே உண்மையான முஃமினாக இருக்கும் பட்சத்தில் எதிரிகளைப் பார்த்து பயப்படத் தேவையில்லை. தப்லீக் செய்வது நமது பொறுப்பாகும். அதனை செய்து கொண்டே செல்ல வேண்டும். இறுதியில் இறைவன் கூறுகிறான்: **வஹுவ ஸரீஉல் ஹிஸாப்** – அவன் கணக்கெடுப்பதில் தீவிரமானவன். கணக்கெடுக்க நினைக்கும் போது விரைவில் கணக்கெடுத்து விடுகிறான். அதற்காக அவசர அவசரமாக தண்டனையும் கொடுக்கிறான் என்று பொருளல்ல. மற்ற மனிதர்களைப் போன்று இந்த பணி இருக்கிறது. இந்த வேலையிலிருந்து விடுபட்ட பிறகே இந்த கணக்கிற்கு வர முடியும் என்ற நிலை உள்ளது. ஆனால் அவனுக்கு அவ்வாறு இல்லை. அவனது கட்டளையை எவரும் தடுக்க இயலாது.

**அன்னா னஃ(த்)தில்அர்ழ னன்**(q)**குஸுஹா மின் அத்ராஃபிஹா** – நாம் நிலத்தை அதன் எல்லைகளிலிருந்து சுருக்கிக் கொண்டே வருவதை அவர்கள் கண்டதில்லையா? (13:42)

**இதே கருத்தை ஆரா அன்பியாவில் அல்லாஹ் கூறுகிறான்:**

**பல் மத்தஃனா ஹாவுலாஇ வஆபாஅஹும் ஹத்தா தால அலைஹிமுல் உமுர். அஃபலா யரவ்ன அன்னா னஃ(த்)தியல் அர்ழ னன்**(q)**குஸுஹா மின் அத்ராஃபிஹா. அஃபஹுமுல்** (g)**காலிபூன்** – உண்மையில் நாம் அவர்களுக்கும், அவர்களின் மூதாதையர்களுக்கும் ஒரு நீண்ட காலம் வரை மிகுதியான வசதிகளை வழங்கியிருந்தோம். நாம் அவர்களின் நாட்டை அதன் எல்லா எல்லைகளிலிருந்தும் சிறிதாக்கிக் கொண்டே வருவதை அவர்கள் காண்பதில்லையா? இவ்வாறிருக்க, அவர்களால் வெற்றி பெற முடியுமா? (21:45)

ஒரு சமுதாயத்தின் ஆயுள் நீளமாக இருந்தால் அல்லது அவர்களின் வல்லமை நீண்ட காலம் நிலைத்திருந்தால், நீங்கள் பெருமை கொண்டு விடாதீர்கள். நீண்ட காலம் உங்கள் ஆற்றல் நிலைத்திருந்தால் நீங்கள் நிரந்தரமாக அப்படியே தான் இருப்பீர்கள் என்று பொருளல்ல. நான் அவர்களையும் அவர்களின் மூதாதையர்களையும் மிக நீண்ட காலமாக சுகமாக வாழச் செய்தோம். செல்வத்தை திரட்டிக் கொண்டிருந்தனர். அதுபோன்று நீங்களும் இருந்தால் நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் அழிந்து விட்டனர். ஐரோப்பிய ஆட்சி மிகவும் விசாலமாக உலகில் பரவியிருந்தது. இப்போது ஐரோப்பியர்களின் ஆட்சி மிகவும் குறைந்து போய் விட்டது. பல நாடுகள் அவர்களிடமிருந்து விடுதலை பெற்று விட்டன. புதிய நாடுகள் பல உருவெடுத்தன. ரஷ்யா எவ்வளவு பரந்து விரிந்து இருந்தது. அங்கும் சுதந்திரம் பெற்ற நாடுகள் உருவாகி விட்டன. இதுபோன்ற தக்தீர் இனி ஏதாவது காலத்தில் அமெரிக்கா மீது செயல்படலாம். எனவே எந்த பெரிய

நாடுகளும் பாதுகாப்பானவை என்று கூற இயலாது. அல்லது அவற்றை நம்பி நிற்கிற எந்த சிறிய நாடுகளுக்கும் எந்த முக்கியத்துவமும் இருக்காது. அவையும் முடிந்து போய் விடும். ஆனால் இஸ்லாத்திற்கு ஒரு நற்செய்தி உள்ளது. உண்மையான முஸ்லிம்களுக்கு நற்செய்தி உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு நற்செய்தி உள்ளது.

முஹம்மதிய மஸீஹின் வருகையினால் இஸ்லாம் உலகில் பரவ வேண்டியிருந்தது. பரவிக் கொண்டிருக்கிறது. நமது தப்லீக் எல்லாம் சாதாரண முயற்சி தான். இஸ்லாம் வெற்றி பெற வேண்டும் என்று அல்லாஹ் முடிவு செய்து விட்டான். எனவே இன்ஷா அல்லாஹ் ஒருநாள் ஆகி விடும். ஆனால் அன்பு நேசத்தின் தூதுச் செய்தியுடன் செய்ய வேண்டும். இதுவே நமது பொறுப்பாகும். பிறகு இறைவனது தக்தீர் எவ்வாறு முடிவு செய்கிறது என்பதை நாம் ஒவ்வொரு காலகட்டத்திலும் பார்த்து வருகிறோம். இறைவனிடமிருந்து ஆபத்துகளின் வேளையில் அவை தென்படுகின்றன. வெள்ளம், புயல் என்று ஒரு தக்தீர் செயல்படுகிறது. அந்தோ முஸ்லிம்களும் இதில் பங்கெடுப்பதற்காக மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் வர வேண்டுமே! வெற்றி இஸ்லாத்திற்கே கிடைக்கும் இன்ஷா அல்லாஹ். அவ்வெற்றியை இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு காட்ட விரும்பினான். எனவே முஸ்லிம்கள் அவருக்கு உதவியாளர்களாக மாறுங்கள். எதிர்ப்பை விட்டு விடுங்கள். இக்காலத்திலும் ஆபத்துகள் வருகின்றன.

எதிர்ப்புகளை குஃப்ரின் தலைவர்களும் பெரிய மனிதர்களும்தான் காட்டுகின்றனர். ஆபத்துகளினால் அப்பாவிகள் தானே கொல்லப்படுகின்றனர்? இதற்கு என்ன காரணம்? என்று சிலர் கேட்கின்றனர். இந்த கேள்விக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பதில் கொடுத்துள்ளார்கள். அவர்களின் வார்த்தைகளிலேயே எடுத்து வைக்கிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சுருக்கமாக, இறைவனது வழக்கம் இவ்வாறுதான் தொடர்கிறது. ஓர் உண்மையாளர் எல்லைமீறி பொய்யாக்கப்படுகிறார். தொல்லை கொடுக்கப்படுகிறார். துன்பத்திறகு ஆளாகிறார் எனில் உலகில் விதவிதமான கஷ்டங்கள் வருகின்றன. இறை வேதங்கள் இதனை கூறுகின்றன. திருக்குர்ஆனும் இதனையே கூறுகின்றது. உதாரணம், மூஸா (அலை) அவர்களை மறுத்ததன் விளைவால் எகிப்தில் பல ஆபத்துகள் வந்தன. தவளை இரத்தம் பஞ்சம் போன்ற அடையாளங்கள் உருவாயின. ஆனால் அந்த வேதனைக்குள்ளான பலருக்கு மூஸா (அலை) அவர்களைப் பற்றிய செய்தி கூட தெரியாது. அவர்களிடம் எந்த பொய்யாக்கும் பாவமும் இருந்ததில்லை. இது மட்டுமல்ல, எகிப்து நாட்டின் எல்லா தலைப் பிள்ளைகளும் குழந்தையிலேயே கொல்லப்பட்டனர். ஆனால் ஃபிர்அவன் ஒரு காலம் வரை ஆபத்திலிருந்து பாதுகாப்பாக இருந்தான். எதுவும் தெரியாதவர்களே முதலில் அழிக்கப்பட்டனர்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் அவர்களை சிலுவையில் அறைந்து கொலை செய்பவர்களின் முடிக்கு கூட எந்த பங்கமும் ஏற்படவில்லை. அமைதியாக வாழ்க்கை நடத்தினர். ஆனால் அந்த நூற்றாண்டே முடியப்போகும் போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சம்பவத்திற்கு நாற்பது வருடத்திற்குப் பிறகு திஹ்தூஸ்ரூமீயின் கையால் ஆயிரக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டனர். பிளேக் நோயும் வந்தது. இந்த தண்டனை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களால் வந்தது என்று குர்ஆனிலிருந்து நிரூபணம் ஆகிறது. அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஏழு ஆண்டுகள் பஞ்சம் ஏற்பட்டது. அதிலும் பெரும்பாலும் ஏழைகளே இறந்தனர். பெரும் பெரும் தலைவர்கள், கஷ்டம் கொடுத்தவர்கள், குழப்பக்காரர்கள் ஒரு காலம் வரை தண்டனையிலிருந்து பாதுகாக்கப்பட்டனர். சுருக்கம் என்னவெனில் சுன்னத்துல்லாஹ் – அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறு தான் தொடர்கிறது. ஒருவர் இறைவன் புறமிருந்து வரும் போது அவர் பொய்யாக்கப்பட்டால் அல்லாஹ்விடமிருந்து ஆபத்துகள் வானத்திலிருந்து இறங்குகின்றன. பொய்யாக்குவதில் சிறிதும் சம்பந்தப்படாத பலர் அதனால் மரணமடைகின்றனர். நிராகரிப்பவர்களின் தலைவர்கள் பிடிக்கப்படுகின்றனர். கடைசியில் பெரிய கொடியவர்கள் பிடிபடுகின்றனர். இந்த விஷயம் குறித்து தான் இந்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

**இன்னா னஃ[த்]தில்அர்ழ னன்(ழ)குஸுஹா மின் அத்ராஃபிஹா** – நாம் நிலத்தை அதன் எல்லைகளிலிருந்து சுருக்கிக் கொண்டே வருவதை அவர்கள் கண்டதில்லையா? (13:42)

மவ்லவிமார்கள் தான் பொய்யாக்கினார்கள். ஆனால் பிளேக் நோயால் மரிப்பதோ ஏழைகள் என்று கூறுகின்றனர். காங்டே, பாக்ஸோ போன்ற பகுதிகளின் மலைகளில் வாழ்ந்து வந்தவர்களிடம் என்ன தவறு காணப்பட்டது? அவர்கள் எதனைப் பொய்ப்படுத்தினர்? என்ற கேள்விகளுக்கு இதில் பதில் வந்து விட்டது.

நினைவில் கொள்ளுங்கள். இறைவனால் அனுப்பப்பட்ட ஒருவர் பொய்ப்படுத்தப்படும் போது ஒரு தனி சமுதாயம் அதனை செய்தாலும் சரி, பூமியின் ஒரு பகுதி அதனை செய்தாலும் சரி, பொதுவாக இறை தண்டனை இறங்குகிறது. வானத்திலிருந்து பொதுவாக தண்டனை இறங்குகிறது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் நடந்தது போன்று அசல் விஷமிகள் கடைசியில் பிடிக்கப்படுகின்றனர்.

ஃபிர்அவ்னுக்கு சிறிதுகூட நஷ்டம் ஏற்படவில்லை. பெரும்பாலும் பல ஏழைகள் கொல்லப்பட்டனர். கடைசியில் ஃபிர்அவ்னையும் அவனது படையுடன் சேர்த்து இறைவன் மூழ்கச் செய்தான். அல்லாஹ்வின் சுன்னத்தை அறிந்தவர் எவரும் இதை மறுக்க இயலாது.

கடந்த சில நாட்களுக்கு முன் சிலி நாட்டில் பூகம்பம் வந்தது. அதற்கு இரண்டு மாதம் முன்பு ஹேத்தி என்ற இடத்தில் பூகம்பம் வந்தது. அதைவிட சிலியில் வந்த பூகம்பம் 64 மடங்கு அதிகமானது. இவை அனைத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆதரவாகவே ஏற்படுகிறது.

நான் ஏற்கனவே வாசித்த மேற்கோளின்கீழ் இன்னொரு மேற்கோள் உள்ளது. அதனையும் படிக்கிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இன்னோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

பிளேக் நோயால் பெரும்பாலும் ஏழைகள் தான் அழிகின்றனர். பணக்காரர்கள், ஜமாஅத்தின் பெரும் பெரும் எதிரிகள் காப்பாற்றப்பட்டு உள்ளனர் என்று பலர் கேள்வி எழுப்புகின்றனர். அல்லாஹ்வின் சுன்னத் இதுதான். கடும் எதிரிகள் கடைசியில் பிடிக்கப்படுகின்றனர். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் தண்டனை இறங்கும்போது அதிகமானோர் மரணித்தபோதிலும் ஃபிர்அவ்ன பாதுகாப்பாக இருந்தான். குர்ஆனிலும் பூமியை அதன் எல்லையிலிருந்து சுருக்கிக் கொண்டு வருவதாக காணப்படுகிறது. சாதாரண மக்கள் முதலில் பிடிக்கப்படுகின்றனர். எதிரிகள் கடைசியில் பிடிக்கப்படுகின்றனர். இறுதியில் இவர்கள் தவ்பா செய்ய வேண்டும் என்பதற்காகவும், இறைவன் சிலரை தப்பிக்க விடுகிறான். அல்லது அவர்களது சந்ததிகளுள் சிலர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

சிலி பூகம்பம் பற்றி கூறினேன். ஹேத்தியில் வந்த பூகம்பத்தை விட 64 மடங்கு ஆற்றல்வாய்ந்ததாக இருந்தது. 15 இலட்சம் பேர் இதனால் நஷ்டம் அடைந்துள்ளனர். 5 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். பூகம்பங்களின் வரலாறுகளை நோக்கும் போது இது உலகில் நடந்த பெரும் பூகம்பங்களுள் ஏழாவது பெரிய பூகம்பமாகும் என்று கூறப்படுகிறது. விஞ்ஞானிகள் இந்த பூகம்பம் பற்றி இன்னும் பல தகவல்களையும் தந்துள்ளனர். இதனால் 1.26 மில்லியன் நிமிடங்கள் அளவிற்கு பூமியின் நாளில் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. அதாவது பூமியின் இந்த அதிர்வின் காரணமாக 1.23 மில்லியன் நிமிடங்கள் நேரம் பூமி நாளில் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. பூமியின் Figure Axis 3 இன்ச் நகர்ந்து விட்டது என்றும் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். பூமியின் சுற்று மையம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பூமியின் சமநிலை பாதிக்கப்பட்டுள்ளது. அதே போன்று துருவப் பகுதியின் பனி உருகி பூமி மூழ்கி விடும் அபாயம் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் முன்னறிவிக்கின்றனர். இது இன்னொரு ஆபத்தாகும். இதுவும் உலகை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பூமி அதிர்ச்சிகளை தமது அடையாளங்களுள் ஒரு அடையாளமாக குறிப்பிடுகிறார்கள். சில அவர்களின் காலத்திலேயே ஏற்பட்டன. சிலியில் ஒரு பூகம்பம் 1906 –ல் அவர்களின் காலத்தில் ஏற்பட்டது. சிலியில் ஏற்பட்ட பூகம்பத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது ஓர் அடையாளமாக குறிப்பிட்டார்கள். இன்னொரு வினோதம் என்னவெனில், மனித அறிவு எட்டிய வரலாற்றின்படி 1570 ஆம் ஆண்டு முதல் 1835 வரை 5 பூகம்பங்கள் ஏற்பட்டுள்ளன. 1835 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்கள் பிறந்த வருடம் ஆகும். அதன் பின் 1868 -ல் ஒரு பூகம்பம் வந்தது. பிறகு 1906 -ல் ஒரு பூகம்பம் வந்தது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வாதத்தை வைத்த பிறகு வந்த பூகம்பமாகும். இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது உண்மைக்கு ஆதாரமாக கூறியுள்ளார்கள். முந்தைய 300 ஆண்டுகளில் நடந்த பூகம்பங்கள் 1570 - 1835 வரை வெறும் 5 தான். ஆனால் கடந்த 100 ஆண்டுகளில் சிலி பகுதியில் மட்டும் 18 பெரிய பூகம்பங்கள் ஏற்பட்டு விட்டன. சிறிய பூகம்பங்களோ தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. பெரும் பயங்கரமான பூகம்பங்கள் வந்து விட்டன. சிலியில் நடந்த சம்பவம் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். பலமுறை இந்த பூகம்பங்களுக்கு முன்னரே பத்திரிகைகளில் என்னிடமிருந்து செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. உலகில் பெரும் பெரும் பூகம்ங்கள் தோன்றும் என்று கூறப்பட்டன. அதனால் பூமியே தலைகீழாகி விடும்.

அத்தகைய பூகம்பங்கள் சான்பிரான்சிஸ்கோ, பார்முஸா போன்ற இடங்களில் எனது முன்னறிவிப்பிற்கேற்ப ஏற்பட்டன. அவை எல்லாருக்கும் தெரியும். இப்போது 16 ஆகஸ்ட் 1906ல் அமெரிக்காவின் தெற்குப்பகுதியாகிய சிலியில் நடந்த கடும் பூகம்பம் முந்தைய பூகம்பங்களை விட குறைந்ததல்ல.

இந்த பூகம்பம் பற்றி செய்தி வந்துள்ளது. முன்றுநாள் வரை அந்த ஊரையும் எவ்வளவு அழிவு என்பதையும் கண்டுபிடிக்கமுடியவில்லை. 15 சிறிய, பெரிய நகரங்கள் அழிந்து விட்டன. 10 இலட்சம் பேர் இதுவரை வீடுகளை இழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இது எப்படி அடையாளமாகும்? இந்த பூகம்பம் பஞ்சாபில் ஏற்படவில்லையே? என்று அறிவற்றவர்கள் கேட்கலாம். இறைவன் முழு உலகிற்கும் இறைவனாவான். பஞ்சாபுக்கு மட்டுமல்ல. அவன் முழு உலகிற்கும் செய்தி தெரிவித்துள்ளான். இறைவனின் முன்னறிவிப்புகளின் பக்கம் கவனம் செலுத்தாமை, இறைவசனங்களை கருத்தூன்றி படிக்காமை, முயற்சி செய்யாமை ஆகியவை பஞ்சாபிற்குரிய ஒரு துர்பேறாகும். உண்மையை எந்த அளவுக்கு மறைத்தாலும் உண்மையை மூடி மறைக்க இயலாது.

நினைவில் கொள்ளுங்கள். இறைவன் உலகில் ஏற்படும் பூகம்பங்கள் குறித்து எனக்கு பொதுவாக அறிவித்துள்ளான். முன்னறிவிப்பிற்கேற்ப அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பூகம்பங்கள் வந்தது போன்று ஆசியாவின் பல்வேறு இடங்களிலும் வரும் அவற்றுள் சில கியாமத்தின் முன்மாதிரிபோன்று இருக்கும். இரத்த ஆறு ஓடும் அளவுக்கு மரணங்கள் நிகழும். பறவைகளும், விலங்குகளும் கூட அதில் இருந்து தப்பாது. மனிதன் உருவான நாள் முதல் இதுவரை வராத பெரும் அழிவு ஏற்படும். பெரும்பாலான இடங்கள் தலைகீழாகி விடும். மக்கள் யாருமே இதற்குமுன் குடியிருக்கவில்லையோ என்று எண்ணத்தக்க அளவில் ஏற்படும். அத்துடன் இன்னும் சில ஆபத்துக்களும் பூமிக்கு ஏற்படும். அறிவுள்ள மக்களுக்கு அவை அசாதாரணமாக ஆபத்துக்களாக நிச்சயம் தெரியும். அந்த ஆபத்துகளை குறித்து அவர்களின் எந்த நூல்களிலும் குறிப்பு காண இயலாது. என்ன நடக்கப்போகிறதோ என்ற உருக்கம் மனிதனிடம் ஏற்படும். பலர் காப்பாற்றப்படுவர். இன்னும் பலர் அழிந்து விடுவர். அந்த நாள் மிக அருகில் உள்ளது. எனது பார்வையில் அதன் வாசல் அருகில் உள்ளது. உலகம் ஒரு கியாமத்தின் காட்சியை பார்க்கும். பூகம்பங்கள் மட்டுமல்ல இன்னும் பல ஆபத்துகள் பயப்படத்தக்கவை வெளிப்படும். சில வானத்திலிருந்தும், சில பூமியில் இருந்தும் தோன்றும். மனிதன் தன் இறைவனை வணங்குவதை விட்டுவிட்டதனால், இவை ஏற்படும். எல்லா எண்ணங்கள், உள்ளங்கள், சிந்தனைகள் அனைத்தும் உலகிலேயே வீழ்ந்து கிடக்கின்றன. நான் வராவிட்டால் ஒருவேளை இந்த ஆபத்துகள் தாமதப்பட்டிருக்கலாம். எனது வருகையுடன் இறைவனின் கோபமும், மறைவான விருப்பமும்- நீண்டகாலமாக மறைந்து கிடந்தது. இப்போது வெளிப்படவிருக்கிறது. இறைவன் அதனைக் குறித்து தான் கூறினான்.

**வமா குன்னா முஅஸ்ஸிபீன ஹத்தா நப்அஸ ரஸூலா** - நாம் எந்த சமுதாயத்திற்கும் ஒரு தூதரை அனுப்பாதவரை ஒருபோதும் ஆக்கினையை அனுப்புவதில்லை. **(17:16)**

**முஹம்மதிய மஸீஹ் முழு உலகிற்காகவும் வந்துள்ளார். மேலும் கூறுகிறார்கள்:**

தவ்பா செய்பவர் பாதுகாப்புப் பெறுவார். இந்த தண்டனையைக் குறித்து முதலிலேயே அஞ்சுபவருக்கு கருணை காட்டப்படும். இந்த பூகம்பத்தில் இருந்து பாதுகாப்பாக இருப்போம் என்று நினைக்கின்றீர்களா? அல்லது உங்கள் முயற்சிகளால் தப்பிவிடலாம் என்று நினைக்கின்றீர்களா? ஒருபோதும் அன்று. இந்த உலகம் ஒருநாள் முடிந்துவிடும். அமெரிக்காவில் வந்த கடும் பூகம்பம் போன்று உங்கள் நாட்டில் வராது நமது நாடு பாதுகாப்பாக இருக்கும் என்று நினைக்காதீர்கள். அதைவிட அதிகமான துன்பங்களை நீங்கள் பார்க்கக்கூடும்.

இதற்குப் பிறகு ஒரு மேற்கோள் இருக்கிறது. அது அதிகமாக படித்துக் காட்டவும் படுகிறது. **அதில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

ஐரோப்பாவே நீயும் பாதுகாப்பில் இல்லை. ஆசியாவே நீயும் பாதுகாப்பாக இல்லை. தீபகற்பங்களில் வாழ்பவர்களே, எந்த செயற்கையான இறைவனும் உங்களுக்கு உதவிக்கு வரமாட்டான். நான் நகரங்களின் குடியிருப்புகளையும் பாழடைந்து கிடக்கக் காண்கிறேன். அந்த ஏக இறைவன் ஒரு நீண்ட காலம் அமைதியாக இருந்தான். அவன் கண்களுக்கு முன் வெறுக்கத்தக்க பல செயல்கள் செய்யப்பட்டன. அவன் அமைதியாக இருந்தான். ஆனால் இப்போது கோபத்துடன் தனது முகத்தை காட்டப்போகிறான். கேட்க காதுள்ளவர்கள் கேட்கட்டும். அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை. இறைவனின் பாதுகாப்பில் மக்களை கொண்டுவர நான் முயற்சி செய்தேன். ஆனால் இறை நியதி நிறைவேறுவது அவசியமாகும். இந்த நாட்டின் அழிவு இப்போது நெருங்கி வருகிறது என்று நான் சத்தியமாக உங்களுக்கு சொல்கிறேன். நூஹின் காலம் உங்களிடம் விரைவில் வரவுள்ளது. லூத்தின் காலத்து சம்பவத்தை உங்கள் கண்களால் காணப்போகிறீர்கள். இறைவன் கடும் கோபம் கொண்டுள்ளான். உங்கள் மீது கருணை காட்டப்படுவதற்காக தவ்பா (கழிவிரக்கம்) செய்யுங்கள். இறைவனை விட்டவர் ஒரு புழுவாவார். அவர் மனிதரல்ல. அவனைப் பயப்படாதவர் மரணித்தவர் ஆவார். உயிருள்ளவர் அல்ல. இந்த எச்சரிக்கை குறிப்பாக இந்தியா மற்றும் பாக்கிஸ்தான் பகுதிகளுக்காக தரப்பட்டது ஆகும். அல்லாஹ் உலகிற்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரை கண்டறிபவர்களாகவும் இறைதண்டனையில் இருந்து தப்புபவர்களாகவும் இவ்வுலக மக்கள் ஆவர்களாக.

நமக்கும் இஸ்லாத்தின் உண்மையான தூதுச்செய்தியை எடுத்து வைக்க வாய்ப்பு தருவானாக. இவ்வழியில் ஏற்படும் எல்லா பிரச்சனைகளும் கஷ்டங்களும் நமது ஈமானை வலுவூட்டட்டுமாக. நாம் பயந்துபோய் நமது வேலையை விட்டுவிடாதிருப்போமாக. அல்லாஹ் நமக்கு தவ்பீக் தருவானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAITUL FUTUH MOSQUE, LONDON,

ON 05.03.2010

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**